www.tamilarangam.net



எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருக வேண்டும். அதுதான் எமது போராட்டத்தில் பாரிய திருப்பு முனைகளை ஏற்படுத்தும். அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்டி எமது விடுதலை இலட்சியத்தை வெகு விரைவில் நிறைவு பெறச் செய்யும்.




# வெற்றிக்கான கூட்டுழைப்பு

## நம் உழைப்பில் நாளிற்கு 15பிபி வழங்கிடுவோம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடக்கத் தொடங்கினால் இளைப்பாறல் கூடாது.
தொடர்ந்து நடப்போம்
சூரியன் கைக்கெட்டும் தூரத்தில்தான் சுடர்கிறது
தமிழீழம் எங்கள் உயிர்க் கோளம்!
உருவாகிவிட்டது சிசு
கருவாய் திறப்பதற்கு காத்திருக்கின்றோம்.

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
## Liberation Tigers of Tamil Eelam

பிரெஞ்சுப் பணியகம்

## தமிழீழக் கட்டுமான நிதி 2001

ஓயாத அலைகள் ஏற்படுத்திய பெருவெற்றியும், ஆனையிறவு மீட்பும் தமிழீழ மக்களின் விடுதலைப் போரை புதிய எழுச்சிமிக்க காலகட்டத்திற்கு அழைத்து வந்துள்ளது. எமது மக்களின் துன்பமும், இழப்புகளும் நிறைந்த வாழ்வை மாற்றிக் காட்டும் வலுமிக்க தமிழர் பலம் நிலைகொண்டுவிட்டதை உலகம் உணர்ந்து கொண்டுள்ளது.

பலம்மிக்க படையணிகளையும், உறுதிமிக்க தலைமையையும் கொண்ட மக்களின் உன்னத எழுச்சியே எமது விடுதலைப் போர் என்பதை ஓயாத அலைகள் மீள ஒருமுறை நிரூபித்து வருகின்றது.

இந்த மக்கள் எழுச்சியை அடக்கி ஒடுக்கிடும் இறுதிமுயற்சியாக மிகப்பெரும் ஆயுதக் குவிப்பையும் – போர் ஆயத்தங்களையும் சிங்களம் மேற்கொண்டு வருகின்றது. யாழ். குடாநாட்டிலிருந்து விரட்டியடிக்கப்படும் நிலையில் உள்ள தமது படைகளை பெரும் ஆயுதக் குவிப்புக்கள் மூலம் பலப்படுத்தி தமிழீழ விடுதலையை தாமதப்படுத்த சிங்கள இயந்திரம் முயல்கின்றது.

இந்தப் பேரினவாதப் போரினை உலக நாடுகளின் கவனத்திற்குக் கொண்டுசென்று சிங்களத்தின் சுயரூபத்தை அம்பலப்படுத்திவரும் எமது தேசியத் தலைவர், யாழ். குடாநாட்டைவிட்டு சிங்களப்படைகளை விரட்டுவது என்ற உறுதியை மாவீரர்நாள் உரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

தலைவரின் இந்த பெரும் உறுதியுரையை நிறைவேற்றும் முடிவுடன் பல்லாயிரம் போராளிகளும், தளபதிகளும் போர்க்களத்தில் செயற்படுகையில் போராளிகளின் கரங்களைப் பலப்படுத்தும் அடுத்த கட்டப் பணிக்காக உங்கள் மத்தியில் “தமிழீழக் கட்டுமான நிதி2001” அறிமுகப்படுத்தப்படுகின்றது.

நாள் உழைப்பில் 15பிபி விடுதலைப் போரிற்கு வழங்கி, தமிழீழ விடுதலையை துரிதப்படுத்திட உழைத்திடுவோம் வாருங்கள்!

கூட்டாக உழைப்போம்! வெற்றிக்காக உழைப்போம்! அனைவரும் உழைப்போம்!

14 ஜனவரி 2001

நன்றி

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net

# உங்கள் பங்களிப்புக்கு நன்றி

சமாதானம் வரப்போகுது, பேச்சு வார்த்தை வரப்போகுது, இனி இந்த மண்மீட்புப்போர் நிற்கப்போகுதோ, உதுக்கு நாங்கள் பங்களிப்புச் செய்ய வேணுமோ, எண்டு சொல்லி கனபேர் நினைக்கலாம். ஆனால் உங்களுக்கு ஒண்டை நான் சொல்லுறன். புலிய ளின்ர கையை நீங்கள் பலப்படுத்த வேண்டும். அது உங்கட பங்களிப்பில் தான் தங்கியிருக்குது. நாங்கள் பலமாக இருந்தால்தான் எங்கடை மக்களை விடுதலை பெறச் செய்ய லாம். நான் தலைவரிட்ட இன்று காலை தொடர்பு கொண்டு கேட்டன். இண்டைய கூட்டத்துக்கு பெருந்தொகை கயான சனங்கள் வருவினம் என்ன சொல்லிறதெண்டு.

அவர் சொன்னார்.

நீங்கள் எங்கட மக்களுக்குச் சொல் லுங்கோ....

"நீங்கள் அளித்த பங்களிப்பிற்கு முதலில் நன்றி. ஆனால் தொடர்ந்தும் நீங்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும். புலிகளின்ர கைகளைப் பலப்படுத்த வேண்டும். நாங்கள் எங்கட இலட்



சியத்தில் இருந்து இம்மியளவும் பிசக மாட்டோம்."

இதைத்தான் தலைவர் உங்களுக்குச் சொல்லச் சொன்னார்.

திரு. பாலசிங்கம் (அரசியல் ஆலோசகர் - தமிழீழ விடுதலைப் புலிகள்) அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து... 02-12-00

## *அறிவித்தல்*

*கிட்டம்மான் 2000 நிதியத்திற்குப் பங்களித்த அனைத்துப் பங்காளிகளுக்கும் தமிழீழத் தேசியத் தலைவரினதும், விடுதலைப் புலிகள் அனைத்துலகப் பணியகப் பொறுப்பாளரினதும் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும். தமிழீழத்தின் பலத்தை நீங்கள் உங்கள் பங்களிப்புக்களால் உயர்த்தினீர்கள்.*

*தமிழீழத்தின் வரலாறு உங்கள் உயரிய தேசப்பற்றை எப்போதும் நினைவு கொள்ளும்.*

*நன்றி*

*நிதிப்பிரிவு*
*தமிழீழ விடுதலைப் புலிகள் - பிரெஞ்சுப் பணியகம்*
*14.01.01*

www.tamilarangam.net

# மக்கள் பங்களிப்பு பெருக வேண்டும்.



யாழ்ப்பாணம் சிங்கள தேசத்திற்கு உரித்தானது அல்ல. யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இறையாண்மை என்பது ஒரு அரசின் தெய்வீக சொத்துரிமையல்ல. இறைடு யாண்மையானது மக்களிடம் இருந்தே பிறக்கிறது. அது மக்களுக்கே சொந்த மானது. யாழ்ப்பாணத்தின் இறை யாண்மை யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையை திணித் துவிட முடியாது. தமிழரின் விடுதலைப் படை என்ற ரீதியில் நாம் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு இடமளிக்கப் போவதில்லை.

எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத் தாலும் எத்தனை இடையூறுகளை எதிர் கொண்டாலும், எத்தகைய சக்திகள் எதிர் த்து நின்றாலும் எமது விடுதலை இயக் கம் யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தே தீரும்.

எல்லாச் சமர்களுக்கும் தாய்ச்சமராக விளங்கிய ஆனையிறவுச் சமரிலும் மற் றும் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப் பாண நகராட்சிப் பகுதிகளில் நிகழ்ந்த சமர்களிலும் களமாடி சாதனைபடைத்த சகல போராளிகளுக்கும், படை நகர்த்திய தளபதிகளுக்கும் எனது பாராட்டுக்கள். எல்லைப்படையாக அணிதிரண்ட எமது மக்கள் இந்தச் சமர்களில் நேரடியாக பங்குகொண்டு போராடியது எமது விடு தலைப் போராட்டத்திற்கு புதிய தெம்பை யும் பலத்தையும் அளித்தது. குடும்பப் பொறுப்புக்களைச் சுமக்கும் இவர்கள் தேசப்பற்றால் ஈர்க்கப்பட்டு ஆயுதப் பயிற்சி எடுத்து பெரும் நிலமீட்புச் சமர்களில் பங்குகொள்வது எமது தேசத்திற்கு பெருமை சேர்க்கிறது. எமது விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட பொதுமக்கள் இணைந்துகொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டம் என்ற உயர் நிலை அரசியல் பரிமாணம் பெறுகிறது. எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருகவேண் டும் அதுதான் எமது போராட்டத்தில் பாரிய திருப்புமுனைகளை ஏற்படுத்தும். அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்பிற்கு முடிவுகட்டி எமது விடு தலை இலட்சியத்தை வெகுவிரைவில் நிறைவுபெறச் செய்யும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு.வே. பிரபாகரன் அவர்களின்
மாவீரர் நாள் செய்தியிலிருந்து... 27-11-2000

www.tamilarangam.net



## களத்தில்

(இரு வார ஏடு)

## எரிமலை

(மாதந்த அரசியல்
- பண்பாட்டு சஞ்சிகை)

## ஒளிவீச்சு

( தமிழீழத்தின் களமுனைகளில்
தயாரிக்கப்பட்ட மாதாந்த
ஒளிவிழைப்பேழை)

விடுதலை உணர்வூட்டும்

## இசைத்தட்டுக்கள்

என்பனவற்றைப் பெற்று விடுதலை வெளிச்சத்தை
எட்டுத்திக்கும் காவிடுங்கள்!

தொலைபேசி செய்திச் சேவைக்கான
தொலைபேசி இலக்கங்கள்: 01 46 36 49 49 / 01 30 32 32 26 / 04 92 10 70 35

மேலதிக விபரங்களுக்கு 01 43 58 11 42
வெளியீட்டுப் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள் — பிரெஞ்சுப் பணியகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ் மீட்பு:

## சிங்கள இராணுவத்தின் முதுகெலும்பு உடைக்கப்படும்.

யாழ். குடாநாட்டிலிருந்து சிறீலங்காப் படைகளை விரட்டியடித்தல் என்பது மிக்க அவசியமானது. இது எமது தேசிய விடுதலைப் போராட்ட நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. யாழ். குடாநாட்டிலிருந்து சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் துடைத்தெறியப்படுதல் பெரும் மாற்றங்களுடனான தொடர் நிகழ்வுகளை, எமக்குச் சாதகமான தேசிய - பிராந்திய - சர்வதேசிய நிலைப்பாடுகளை ஏற்படுத்தும். அதேவேளை, சிறீலங்காவில் பெரும் முரண்பாடுகளை - உள்மோதல்களை ஏற்படுத்தும். யாழ்.குடா மீட்பு பின்வரும் பின்விளைவுகளை ஏற்படுத்த வல்லது.

* பெருமளவு இராணுவம் யாழ். குடாநாட்டில் குவிக்கப்பட்டுள்ள நிலையில் ஆளணி ஆயுத தளபாட இழப்பைச் சந்திப்பின் சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பு சீர்குலைக் கப்படும். மீளவும், நிமிரவும் முடியாதவகையில் முதுகெலும்பு உடைக்கப்பட்டுவிடும்.

* சிறீலங்கா ஆயுதப் படைகளில் எஞ்சியுள்ளவர்களும் சிதைந்து தப்பிஓடும் மனப்பாங்கு உருவாகும்.

* சிறீலங்கா அரசின் பேரினவாத அத்திவாரம் உலுப்பப்பட்டு வெடிப்புக்காணும்.

...உலக வரலாற்றில் அடிமைவிலங்குகளை அறுத்தெறிவதற்கான ஆக்கிரமிப்பிற்கு எதிரான பெரும் போராட்டக் குறியீடுகளாக சில நகரங்கள், பிரதேசங்கள் விளங்குகின்றன. சீனப் புரட்சி வரலாற்றில் நெடும்பயண இலக்காகிய யேனான் பிரதேசம், இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜேர்மனியப் படைகளின் முற்றுகையை உடைத்ததன் மூலம் யுத்தத்தின் போக்கையே மாற்றிய ஸ்ரலின்கிராட், யூதமக்களின் இலக்காக விளங்கிய ஜெருசலம், கியூப புரட்சி வீரர்களது தளமாகிய சியேராமஸ்ரா எனப்பல போராட்ட திருப்புமுனைக் குறியீடுகளாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளன.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் யாழ்.குடா முக்கிய இடத்தைப் பெறுகின்றது. யாழ். குடாநாடு பெரும் மக்கள் தொகையைக் கொண்ட பிரதேசம் என்பதற்கும் அப்பால் விடுதலைப் போராட்டத்தின் புதிய பரிமாணத்திற்கான அரும்புவிடும் வித்தாக யாழ். குடாநாடு கண்முன் விரிந்து நிற்கின்றது....

*( வன்னியில் வெளியாகும் ஈழநாதம் ஏட்டில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரையிலிருந்து தேர்வுசெய்யப்பட்டது. எரிமலை டிசம்பர் 2000 இதழில் முழுக் கட்டுரையையும் வெளியாகியுள்ளது.)*

www.tamilarangam.net

ஈழத் தமிழரின் சோதனைக் காலம் முடிந்துவிட்டது
இனிச் சாதனைக் காலம்
இருள்வாழ்வு எமக்கினி எப்போதுமில்லை
வெற்றியின் முகமே எமக்கினி விளங்கும்
எங்கள் மூச்சுக் கலந்த காற்றுக்கு முன்பாக
நிற்கும் பலம் உலகத்தில் எவருக்கும் இல்லை
நாங்கள் வேர்படர்ந்த அறுகம்புல்
கொத்திப் புரட்டினாலும் முளைப்போம்
கொழுத்தி எரிந்தாலும் துளிர்ப்போம்
நிமிர்ந்த வாழ்வு வருமென நினை
வருந்தி உழை
தமிழீழம் வருமென நம்பு
தளராது போராடு
உன்னை யாரழித்தல் கூடும்?

நேற்றைய துயர் தொலைய
நிகழ்காலம் எம்பக்கம்
தாழ்வுற்று எம்தலை குனிந்தது போதும்
வாழ்வு சமைப்போம் வாருங்கள்

( தமிழீழத்தில் கவிஞர் வியாசன் அவர்களினால் எழுதப்பட்ட கவிதையிலிருந்து....)